செ.வெ.எண்: 18 நாள்: 07.03.2017

# பத்திரிகைச்செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் தமிழ்நாடு அரசு வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் **புதுக்கோட்டை** மாவட்டத்தில் **புதுக்கோட்டை, கீரனூர், கந்தர்வகோட்டை, நாகுடி, அன்னவாசல், கோமாபுரம், கறம்பக்குடி, கரூர், மணமேல்குடி, ஆவூர், ஆலங்குடி, காரையூர், அறந்தாங்கி, விராலிமலை மற்றும் அரிமளம் ஆகிய 15** இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்களில் உலர் தீவன கிடங்குகளை நிறுவியுள்ளது. வறட்சி நிலை சீராகும் வரை ஒரு கால்நடைக்கு தினம் 3 கிலோ வீதம் அதிகபட்சம் 5 கால்நடைகளுக்கு ஒரு வாரத்திற்கு 105 கிலோ வரை விவசாயி ஒருவருக்கு உலர் தீவனம் மானிய விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ.2/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கால்நடை வளர்ப்போர் தங்கள் குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டையுடன் உலர் தீவனக் கிடங்கு அமைந்துள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரை அணுகி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**